**சுங்க மேலதிக நேர, கப்பல் சரக்குப் பரீட்சிப்புக் கட்டணம் மற்றும் சுங்க தகவல்கள் தொடர்பாடல் தொழில்நுட்ப நிதியம் - 2016**

இலங்கை சுங்கத்தின் சுங்க மேலதிக நேர, கப்பல் சரக்குப் பரீட்சிப்புக் கட்டணம் மற்றும் சுங்க தகவல்கள் தொடர்பாடல் தொழில்நுட்ப நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதியத்தின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சுங்க மேலதிக நேர, கப்பல் சரக்குப் பரீட்சிப்புக் கட்டணம் மற்றும் சுங்க தகவல்கள் தொடர்பாடல் தொழில்நுட்ப நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01**

(i) நியமங்களின் 21 (உ) ஆம் பந்தியின் பிரகாரம், குறைநிரப்பு நிதிக்கூற்றுக்களுக்காக பாதிடப்பட்ட மற்றும் உண்மையான தொகைகளுக்கிடையிலோ அல்லது நிதிக்கூற்றுக்களிலுள்ள தனிப்பட்ட நிரலிற்காக பாதிடப்பட்ட தொகைகளுக்கிடையிலான ஒப்பீடொன்றை சமர்ப்பிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதிக்கூற்றுக்களின் உரிய காலப்பகுதி மற்றும் நாணயமாற்று அலகு மேலதிக நேர நிதியத்திற்காக தயாரிக்கப்பட்ட உரிமை மாற்றக் கூற்றில் குறிப்பிடப்பட்டிருக்காததுடன் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களின் தொகுதிக்காக உரிமை மாற்றல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதனால், மேற்கொள்ளப்பட்ட நியமத்தின் அறிவுறுத்தலானது நிதியத்தின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கையில் பின்பற்றப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(iii) சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் நியமத்தின் 48 ஆம் பந்தியின் பிரகாரம் நியமங்களால் வேண்டப்படாதவிடத்து அல்லது அனுமதிக்கப்படாதவிடத்து தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா 209,942,470 தொகையான கடன்பட்டோர் வரவு மீதி மற்றும் ரூபா 101,090 தொகையான கடன்பட்டோர் செலவு மீதி ஒவ்வொன்றுக்கெதிராக தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 209,841,380 தொகையான தேறிய பெறுமதி 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(iv) உருப்படிகள் ஒவ்வொன்றினதும் பொருண்மையான வகுப்பு நியமத்தின் 45 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக வெளிப்படுத்த வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது பரீட்சிப்பு நிதியம் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிதியம் என்பவற்றுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்களுக்கு செலுத்த வேண்டியுள்ள ரூபா 79,933,557 மற்றும் 998,400 தொகைகளான மொத்தப் பெறுமதி ரூபா 80,931,956 உரிய செலவின விடயங்களுக்கு தனித்தனியாக இனங்காண்பதன் மூலம் கணக்குகளிற்கு கொண்டு வருவதற்கு பதிலாக வருமானக்கூற்றில் தனித்தனியாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) **இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் - 02**

காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கையில் மீளாய்வாண்டுடன் தொடர்புடைய ரூபா 1,943,123 தொகையான ஐயக்கடன்கள் குறை ஏற்பாடுகள் மற்றும் கடன்பட்டோர்களின் மொத்தப் பெறுமதியை செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் கடன்பட்டோர்களாக தேறிய பெறுமதி செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் திருத்தப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்கீட்டு கொள்கைகள்**

கடன்பட்டோரின் உள்ளக தன்மை மற்றும் ஆயுட்காலம் என்பவற்றை கருத்திற்கொள்ளாமல் ஐயக்கடன்களிற்காக கடன்பட்டோர்களின் 15 சதவீத பொதுவான விகிதத்தில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**2.2.3 கணக்கீட்டு குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வருமானமானது சப்பல் சரக்கு பரீட்சிப்பு கட்டளை நிதியத்தின் வருமானக் கூற்றிலுள்ள இலங்கை சுங்கத்தின் ஒவ்வொரு பிரிவிற்கிணங்க அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், அத்தகைய அனைத்து துறைகளுடன் தொடர்பாக மீளாய்வாண்டில் மீளச் செலுத்தப்பட்ட ரூபா 495,809 தொகை ஒவ்வொரு துறைகளின் வருமானத்திற்கு எதிராக திருத்துவதற்கு பதிலாக நிதியத்தின் மொத்த வருமானத்தை கழிப்பதனைக் காட்டியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு இலங்கை சுங்கத்தின் ஏனைய வருமான தலைப்பின் கீழ் உள்ளடக்கிய ரூபா 25,895,605 வருமானத்தில் நிதியத்திற்கு செலுத்த வேண்டியுள்ள பெறுமதியை கணக்கிற்கு கொண்டு வருவதிற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் ஒருங்கிணைந்த காசுப்பாய்ச்சல் கூற்றினையும் துணை நிதியத்தின் காசுப்பாய்ச்சல் கூற்றினையும் ஒப்பிடும் போது அவற்றிலுள்ள பெறுமதிக்கிடையில் ரூபா 499,200 விளக்கமளிக்கப்படாத வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் அட்டுறு அடிப்படையில் மேலதிக நேர வருமானத்தை குறிப்பிடுவதனாலும் காசு அதனுடன் தொடர்புடைய பட்டியல்களில் காசு அடிப்படையில் குறிப்பிடுவதன் மூலம் ரூபா 12,966,543 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

**2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

மீளாய்வாண்டின் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட ரூபா 79,933,556 தொகையான செலுத்த வேண்டிய பரீட்சிப்பு கட்டணங்கள் ரூபா 349,140 தொகையான பொறுப்புக்கள் மற்றும் ரூபா 46,259,055 பெறுமதியான AE-OT-03 பேரேட்டு குறிப்பு போன்றவற்றிற்கு தேவையான பட்டியல்கள் அல்லது விளக்கமளித்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 149 நிறுவனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த மொத்த கடன்பட்டோர்கள் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 209,841,380 ஆக இருந்ததுடன், அக் கடன்பட்டோரில் 11 சதவீதம் அல்லது ரூபா 23,180,736 தொகை 10 வருடங்களிற்கு மிஞ்சிய கட்னபட்டோர் மீதிகளாவிருந்தது. மேலும், மொத்த கடன் மீதியின் ரூபா 188,391,441 தொகை 90 சதவீதம் 13 பிரதான நிறுவனங்களிடமிருந்து நிதியத்திற்கு அறவிட வேண்டிய மீதிகளாகவிருந்தது. எனினும், நிலுவையிலுள்ள ரூபா 61,880,400 தொகையான பணம் இந்த அறிக்கை திகதியளவில் அறவிடப்பட்டிருந்ததுடன் மேலும், அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை கடன்களினை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

2007 ஒக்தோபர் 26 ஆந் திகதிய 1520/17 ஆம் இலக்க வர்த்தமானியின் பிரகாரம் பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரிடமிருந்து விசாரணை செய்வதன் மூலம் நிதி அமைச்சின் செயலாளரால் நேரத்திற்கு நேரம் தீர்மானிக்கப்பட்ட கொடுப்பனவு தொகைகளுடன் இணங்கும் வகையில் மேலதிக நேர கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் இலங்கை சுங்கத்தின் மேலதிக நேர கொடுப்பனவுகளிற்காக அத்தகைய அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், திணைக்களத்தின் மேலதிக நேர குழுவினால் 2013 ஆம் ஆண்டு வரை செலுத்தப்பட்ட மேலதிக நேர கொடுப்பனவில் 2013 ஆம் ஆண்டிலிருந்து மேலும் 45 சதவீத இடைவெளி அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், இதற்காக விஷேட அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. அதனால், 24 மணித்தியால விடுமுறை மற்றும் மேலதிக நேர கொடுப்பனவிற்காக 27 மணித்தியால மேலதிக நேரம் முறையே பொது வேலை நேரத்திற்காக 18 ¾ மணித்தியாலம் வரை நடைமுறை மேலதிக நேர கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது இலங்கை சுங்கத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதற்கு மேலதிகமாக, சுங்க கட்டளையின் 103 ஆம் பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட 2007 ஒக்தோபர் 26 ஆந் திகதிய 1520/17 ஆம் இலக்க அரச வர்த்தமானியின் பிரகாரம் சுங்க மேலதிக நேர நிதியத்திற்கு சேர்க்கப்பட்ட பணத்தால் இலங்கை சுங்க உத்தியோகத்தருக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளவேண்டிய போதிலும், இலங்கை சுங்கத்தின் பதவியினிணில் உள்ளடக்கப்படாத வெளிவாரி நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்காகவும் நிதியத்தின் மேலதிக நேர கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதியத்தின் நிதிசார் விளைவுகள் ரூபா 241,772,052 மிகையாக இருந்ததுடன் அதனோடெத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 190,195,551 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 51,576,501 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதியத்தின் வருமானம் 03 சதவீதத்தினால் அல்லது ரூபா 36,972,959 தொகையால் அதிகரித்தமை மற்றும் 1.5 சதவீதத்தால் அல்லது ரூபா 14,603,542 ஆல் நிதியத்தின் செலவினம் குறைவடைந்தமை மேற்கூறப்பட்ட முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாகவிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

சுங்க கட்டளை அதிகாரச் சட்டத்தின் 103 ஆம் பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட 2007 ஒக்தோபர் 26 ஆந் திகதிய 1520/17 ஆம் இலக்க அரச வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், உத்தியோகத்தர்களால் வழமையான கடமை நேரத்திற்கு புறம்பாக வேலைகளில் செய்யப்படுகின்ற கடமைகளுக்காகவும் வழமையான கடமை நிலையங்களிலிருந்து புறம்பான இடங்களில் நிறைவேற்றப்படும் கடமைகளுக்காகவும் வெவ்வேறு தரப்பினர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற கட்டணங்கள் மற்றும் அறவீடுகள், இலங்கை முதலீட்டு சபைக்கு தொழில்நுட்ப சேவைகளை வழங்குவதற்காக அந்நிறுவனத்திடமிருந்து அறவிடப்படுகின்ற கட்டணங்களும் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். அவ்வாறே அம்மேலதிக கடமைகளுக்காக உத்தியோகத்தர்களுக்கு செய்யப்படுகின்ற கொடுப்பனவுகள் இந்நிதியத்திற்கு செலவினமொன்றாக கருதப்படும். மீளாய்வாண்டினுள் மேற்குறித்த படி மேலதிக நேரம், கப்பல் சரக்கு பரீட்சிப்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப நடவடிக்கைகளுக்காக முறையே ரூபா 892,733,942 ரூபா 312,561,714 மற்றும் ரூபா 14,976,000 தொகை சேகரிக்கப்பட்டிருந்ததுடன், அவ்வேலைகளுக்காக உத்தியோகத்தர்களுக்கு முறையே ரூபா 561,042,027 ரூபா 156,280,857 மற்றும் ரூபா 11,980,800 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1967 ஆம் ஆண்டு முதல் 1973 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இலங்கைச் சுங்கத்தினால் சேவை வழங்கப்பட்ட 75 நிறுவனங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 12,661,650 தொகையான ஆரம்ப வைப்புப் பணம், சேமிப்புக் கணக்குகளில் முதலீடு செய்யப்பட்டமையால் மீளாய்வாண்டின் இறுதிவரையில் பெறப்பட்டிருந்த வட்டி ரூபா 253,314 ஆக இருந்தது. இப்பெறுமதி மீளச் செலுத்த வேண்டிய வைப்பாக அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், குறித்த வைப்புக்களுக்கு உரித்தான நிறுவனங்களின் நிலைத்திருக்குந்தன்மை தொடர்பாக எந்தவொரு புலனாய்வொன்று மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், அம்மீதிகளை தீர்வு செய்வதற்கு முறையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேலதிக நேர சேவைக்கு வேலைக்கமர்த்தல் மற்றும் மந்தமான மட்டத்தில் கொடுப்பனவு தொடர்பில் இலங்கை சுங்கத்தால் உள்ளக கட்டுப்பாட்டின் செய்முறை அமுல்படுத்தப்பட்டதுடன் அதனால், உத்தியொகத்தர்களின் மேலதிக நேர பதிவேட்டை செயற்படுத்துவதன் மூலம் மாத்திரமே மேலதிக நேரத்தை பெறும் தகுதி உள்ளது என அவதானிக்கப்பட்டது. பல வருடங்களாக உள்ளக கட்டுப்பாட்டிலுள்ள குறைபாடுகளாக இது கணக்காய்வு ஐயவினாக்கள் மற்றும் கணக்காய்வு அறிக்கை மூலம் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இந்த நிலைமையை முறைப்படுத்துவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎவ்/423 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 43 ஆம் பிரிவின் பிரகாரம், வருடாந்த செயலாற்றல் அறிக்கையும் நிதிக்கூற்றுக்களும் கணக்காண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், இந் நிதியத்தின் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 02 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், திருத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2017 யூன் 05 இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது நிதியத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) மேலதிக நேர கொடுப்பனவுக் கட்டுப்பாடு | (i) மேலதிக நேர கொடுப்பனவிற்காக தேவையான அனுமதியை பெறுவதற்காக முறையான செய்முறை காணப்படாமை மற்றும் சேவைகளினை வழங்குவதில், பதிவேடுகளின் பராமரிப்பில், கண்காணிப்பு மற்றும் செலுத்துகைகளினை மேற்கொள்கையில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டிருக்காமை |
| (ஆ) கணக்கீடு | (i) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கினை பேணாமை |
| | (ii) முகாமைத்துவத்தால் நாட்குறிப்பேடுகளை மேற்கொள்வதில் பெறுமதியின் பிரகாரம் குறித்த நியம எல்லையை தீர்மானிக்காமை |